| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 10/10/2023 |
| Case No. | : O.S. 338/2019 | Nationality | : Indian |
| Name | :ஹபிப் முகமது | Religion | : |
| Father's/Husband's Name | : உமர்கதாப் | Age | :70 |
| Village | : | | |
| Taluk | : | | |

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன். எனக்கு தற்போது ஞாபகமில்லை. மொத்தம் எத்தனை சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுக்கு தெரியாமல் போர்ஜரியாக ஆவணம் தயார் செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் போர்ஜரியாக ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் தேதி எனக்கு தெரியவில்லை. நான் வெளிநாட்டில் வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான். நான் 1977 ம் ஆண்டு முதல் 2007 ம் ஆண்டு வரை வெளிநாட்டில் வேலை செய்து வந்தேன். எனது தகப்பனார் எந்த தேதியில் இறந்துவிட்டார் என்றால் 1976 ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என்னையும் சேர்த்து 6 பேர் ஆவார்கள்.

2. வழக்கு சொத்து யாரால் கிரையம் வாங்கப்பட்டது என்றால் எனது தகப்பனாரால் கிரையம் வாங்கப்பட்டது. எந்த தேதியில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் தேதி எனக்கு தெரியவில்லை. 1 ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்றாலும், 2 ம் பிரதிவாதி அவரது மனைவி என்றாலும் சரிதான். எனது தாயார் பெயர் பாத்திமா பீவி என்றால் சரிதான். எனது தாயார் 1 ம் பிரதிவாதிக்கு ஹிபா ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. 21/02/1976 ம் தேதியில் எங்கள் குடும்பத்திற்குள் கரவோலை எழுதப்பட்டதா என்றால் எழுதப்படவில்லை.

**பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.